[1993 ஏப்ரல் 15

2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய உரிமை மீறல் பிரச்சினை பற்றிய அந்தக் கருத்தை சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களிடத்தி லேயிருந்து பதில் பெற்றதும் (குறுக்கீடு) இல்லை. நீங்கள் ஒரு வரலாற்றுப் பிரச்சினை பற்றி எழுப்பியிருக்கிறீர்கள். அவர்களும் அதுபற்றிய ஆதாரங்களைத்தேடி இங்கே வைக்க வேண்டி யிருக்கிறது. அது வந்தவுடன் நான் உங்களுக்குத் தெரிவிப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறொன்று கொடுத்திருக் கிறீர்கள். நான் உங்களுக்குப் பதில் கொடுத்து இருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களிடம் தெரிவித்துவிட்டுச் சொல்லுகிறேன். உட்காருங்கள்.

3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

(அ) சென்னையில் 11-4-1993 அன்று முதலமைச்சர் கர்நாடக முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி பத்திரிகை களில் வெளிவந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ் பேரவையில் ஒரு அறிக்கையினை வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப் பட்டு இருக்கிறது. கர்நாடக முதலமைச்சரோடு அவர்கள் பேசிய அந்தப் பேச்சுவார்த்தை தொடர்பான ஒரு அறிக்கையை வெளியிட அனுமதி கோரி இருந்தார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதை இப்பொழுது மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் வெளியிடுவார்கள். மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9—4—1993 அன்று நமது சிறப்பு அதிரடிப் படையினரையும், கர்நாடகக் காவல் துறையினரையும், உதவிக்குச் சென்றவர்களையும், சந்தன மரக் கடத்தல்காரனான வீரப்பனின் கூட்டாளிகள், கொன்று குவித்து காயப்படுத்திய சம்பவம் பற்றியும், சென்ற 11-4-1993 அன்று, நானும், கர்நாடக முதலமைச்சர் திரு. வீரப்பமொய்லி

அவர்களும், சென்னையில் சந்தித்து வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது குறித்தும், இம் மாமன்றத்தில் 12-4-1993 அன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்கும்போது, விரிவாக எடுத்துக் கூறி இருந்தேன்.

தமிழகக் காடுகளைக் காப்பதற்காகவும், அப்பகுதியில் வாழும் தமிழக மக்களை, வீரப்பனின் அச்சுறுத்தல்களிலிருந்தும், அராஜகத்திலிருந்தும் விரைவில் காக்க வேண்டும் என்பதற்காக வும், நான் கர்நாடக முதலமைச்சர் அவர்களைச் சென்னைக்கு அழைத்து, வீரப்பனையும் அவனது சமூக விரோதக் கும்பலையும் பிடித்து, அவர்களது பயங்கரவாதத்துக்கு, இரு மாநிலங்களிலும் ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத் தில் நடத்திய கூட்டத்திற்கு, ஒருசில அரசியல்வாதிகள், காழ்ப்புணர்ச்சியுடன் உள்நோக்கம் கற்பித்திருக்கின்றார்கள். நானும், கர்நாடக முதலமைச்சரும் என் அலுவலக அறையில் சந்தித்துப் பேசியபோதோ, அதன்பின் நடைபெற்ற கூட்டத் திலோ, அதனைத் தொடர்ந்து நான் அளித்த விருந்தின் பொழுதோ, காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பற்றி எதுவும் பேசவில்லை. எங்கள் இருவரின் கலந்துரையாடலில், காவிரி நீர் என்ற பொருளே இடம் பெறவில்லை. வீரப்பன் மற்றும் அவனது கும்பலின் நடவடிக்கைகளை, எப்படிக் கட்டுப் படுத்துவது என்பது பற்றியும், அவர்களை விரைவில் எப்படிப் பிடிப்பது என்பதைப் பற்றியும் தான் விவாதிக்கப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், தமிழக அரசு ஏற் கெனவே எடுத்த முடிவில் எந்தவிதமான மாறுதலும் எப்போதும் கிடையாது. காவிரி நீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக் கால ஆணையை, கர்நாடக அரசு முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதில்தான், நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். தமிழ்நாட்டின் இந்த உறுதியான நிலையைத்தான், மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்தி வருகின்றேன். இந்த நிலையிலிருந்து எவ்வித மாற்றமும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்பு கிறேன். காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றம், இந்தப் பிரச்சினையை முழுமையாக விசாரித்து, தனது முடிவான தீர்ப்பை வெளியிட வேண்டும் என்பதுதான், தமிழக அரசின் தெளிவான, முடிவான கொள்கை ஆகும். சில நாட்களுக்கு முன்பு கூட, காவிரி நதி நீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்றும் பணியை மேற் பார்வை செய்ய, மைய அரசின் நீர் ஆணையம் பொறுப்பு ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி, மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு. சுக்லா அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி யுள்ளேன். எனவே, காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் இந்த அரசின் கொள்கை தொடர்ந்து மாறுபடாமல்தான், கன்சிஸ்டன்ட் ஆகத்தான் இருந்து வருகிறது என்பதை அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1993 ஏப்ரல் 15 முற்பகல் 11-15

நான் கர்நாடக முதலமைச்சர் திரு. வீரப்பமொய்லியுடன், காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி பின்னர் விவாதிக்கலாம் என்று கருத்துத் தெரிவித்ததாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவை வீரப்பனையும், அவனது கூட்டாளிகளையும் விரைவாகப் பிடிப்பதற்காக நான் எடுத்த முயற்சிகளுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் வெளியிடப்பட்ட தவறான, விஷமத்தனமான செய்திகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு எடுத்து வரும் நல்ல நடவடிக்கைகளுக்கு அவப்பெயர் சேர்த்திட வேண்டும் என்று சில அரசியல்வாதிகள், அரசியல் சுய லாபத்திற்காக, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் முயற்சிதான் இது என்று கருதுகின்றேன்.

ஒரு ஆங்கில நாளேட்டிற்கு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் சங்கத் தலைவர் ஒருவர் எழுதியுள்ள கடிதத்தில், காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை பற்றி, இரு மாநிலங்களும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக, என்னுடைய அறிக்கையில் கூறியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. அப்படிப்பட்ட அறிக்கையை நான் வெளியிடவில்லை. கூட்டம் தொடர்பான விபரங்கள் அனைத்தும், இரு மாநில முதல்வர்களின் ஒப்புதலுடன் அரசு செய்தி வெளியீடாகத்தான் 11—4—1993 அன்று வெளியிடப்பட்டது. அந்தச் செய்தி வெளியீட்டிலும், காவிரி நதி நீர் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. அதன் பின்னர் இது சம்பந்தமான வேறு எந்த அறிக்கையையும் நான் வெளியிடவில்லை—பேட்டியும் தரவில்லை. எனவே, அந்த வாசகரின் கூற்று முற்றிலும் தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 9—4—1993 அன்று 22 பேர் இறந்து போன துரதிருஷ்டவசமான சம்பவத்திற்குப் பின்னர் இந்த அரசு மேற்கொண்ட விரைவான சிறந்த நடவடிக்கைகளால் தமிழக மக்கள் மனதில் ஒரு நம்பிக்கையும், அரசின் மீது நல்லெண்ணமும் ஏற்பட்டிருக்கிறது. தகவல் வந்த உடனே இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமுற்றவர்களுக்கும் நான் அறிவித்த உதவித் தொகை : விரைந்து சேலத்திற்குச் சென்று வீர மரணம் அடைந்தவர்களின் உடல்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியது; இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் சொன்னது ; காயமுற்றவர்களை நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்து, அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்தது ; அதனைத் தொடர்ந்து, சென்னை திரும்பிய உடனேயே கர்நாடக முதலமைச்சரை

[1993 ஏப்ரல் 15 [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சென்னைக்கு அழைத்து இரு அரசுகளின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தியது— இவைகள் எல்லாம் வீரப்பனும், அவனது கும்பலும் விரைவில் பிடிபடுவார்கள் என்ற நம்பிக்கையையும், இந்த அரசு மிக வேகமாகவும் பொறுப்புடனும், கடமை உணர்வுடனும் செயல்படுகின்ற அரசு என்ற நல்லெண்ணத்தையும் தமிழக மக்கள் மனதில் ஏற்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி).

எனவேதான் மக்களைத் திசை திருப்பவும், என் மீதும், இந்த அரசின் மீதும், தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னும் அதிகமான நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் தகர்க்க வேண்டும், சிதைக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தினால் கடந்த மூன்று நாட்களாக, வீரப்பன் கும்பலைப் பற்றியே பேசாமல் அதற்குச் சம்பந்தமே இல்லாத காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை முதன்மைப்படுத்தி அடிப்படையே இல்லாத, ஆதாரமற்ற உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை வெளியிட்டும் பத்திரிகைகளில் தவறான செய்திகளை வெளியிட்டும் இதன் மீது ஒரு பெரிய சர்ச்சையையே ஏற்படுத்தியும், நான் சொல்லாதவற்றை எல்லாம் சொன்னதாக இட்டுக் கட்டியும், புனைந்தும், ஒரு சில அரசியல்வாதிகள், அரசியல் சுய லாபத்திற்காக, பொறாமையால், காழ்ப்புணர்ச்சியால் உந்தப்பட்டு, எனக்கும் அரசிற்கும் களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-20.

ஒருசில பத்திரிகைகளில் 11-4-1993 அன்று காலை 10-15 மணி முதல் 10-30 மணி வரை தமிழக முதலமைச்சர் அவரது அலுவலக அறையில் கர்நாடக முதலமைச்சருடன் தனியாகப் பேசினார்; அப்போதுதான் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசினார்கள் என்றெல்லாம் செய்திகள் வெளியிட்டிருப்பதைப் பார்க்கின்றபோது வேடிக்கையாக இருக்கின்றது. இதுபோன்ற சந்திப்புகளின்போது, சில மரபுகள் வழக்கமாகக் கடைப் பிடிக்கப்படுகின்றன. ஆந்திர மாநில முதலமைச்சருடன், நான் ஹைதராபாத் சென்று இருமுறை பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது, ஆந்திர முதலவர் முதலில் என்னை வரவேற்று அவருடைய அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார். ஆந்திர அரசின் தலைமைச் செயலர் என்னுடன் வந்த அரசு அலுவலர்களை மாநாட்டு கூட்டத்திற்கு அழைத்துச் சென்று அமர்த்தினார். கூட்டத்திற்கு எல்லாம் ஆயத்தமாக இருக்கிறது என்ற தகவல் தெரிந்தவுடன், ஆந்திர முதலமைச்சர் என்னை மாநாட்டுக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். அதுபோலவே, டெல்லியில் நடைபெறுகின்ற திட்டக் கமிஷனுடனான விவாதத்திற்கு நான் செல்லுகின்ற போதெல்லாம் மத்திய திட்டக் கமிஷன் துணைத் தலைவர், அவர்களின் அலுவலக அறைக்குத்தான் முதலில் என்னை அழைத்துச் செல்வது

வழக்கம். என்னுடன் வந்த அதிகாரிகளை நேராக மாநாட்டுக் கூடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே எல்லோரும் அமர்ந்து ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்று அறிந்த பின்னர், திட்டக் கமிஷன் துணைத் தலைவர் என்னை அங்கே அழைத்துச் செல்வார். அதே முறைப்படிதான் கடந்த 11-4-1993 அன்று கர்நாடக முதல்வர் கோட்டைக்கு வந்ததும், முதலில் அவரை வரவேற்று, எனது அலுவலக அறைக்கு அவரை அழைத்துச் சென்று, மரியாதை நிமித்தமாக அவருடன் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தேன். தமிழக அரசின் தலைமைச் செயலர், கர்நாடக முதலமைச்சருடன் வந்திருந்த அரசு அதிகாரிகளை மாநாட்டுக் கூடத்திற்கு அழைத்துச் சென்று அமர்த்தினார். சில நிமிடங்கள் கழித்து, நானும், கர்நாடக முதலமைச்சரை அங்கு அழைத்துச் சென்றேன். இரண்டு மாநில முதலமைச்சர்கள் சந்திக்கின்றபோது, வழக்கமாகப் பின்பற்றப் படுகிற நடைமுறை இது என்பதுகூடத் தெரியாமல், சில நிமிடங்கள் தனியாக எனது அலுவலக அறையில் பேசிக் கொண்டிருந்தேன் என்பதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, இதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, அந்த சில நிமிடங்களில் நான் அவருடன் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை பற்றி விவாதித்தேன் என்று செய்திகள் வெளியிடுவது வடிகட்டிய கலப்படமில்லாத, கடைந்தெடுத்த அறிவின்மை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இதையெல்லாம் காரணம் காட்டி குற்றம் குறை சொல்ல ஏதாவது கிடைக்காதா என்று சதா ஏங்கிக் கிடக்கின்ற நமது சில உள்ளூர் அரசியல்வாதிகள் இதையே பிடித்துக் கொண்டு கண்டன அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கின்றபோது சிரிப்பதா அல்லது வேதனைப்படுவதா என்றே எனக்குப் புரியவில்லை.

நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். அண்டை மாநிலங்களுக்கு இடையே, ஒரு சுமுகமான உறவு நிலவ வேண்டும் என்பதில், எங்களுக்கு மாறுபட்ட கருத்தே கிடையாது. ஆனால், அந்த சுமுக உறவிற்காக, தமிழக மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்க, நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், எங்கள் அரசு ஏற்கெனவே எடுத்த முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தின் உரிமைகளை எந்தக் கால கட்டத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தின் மூலம் தமிழக மக்களுக்குத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த பிரச்சினை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

199ம் [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-இல் அறிக்கை வெளியிடுகிறபோது, 'கிளாரிபிகேஷன்' கேட்க முடியாது, இந்த நேரத்திலே கேட்க முடியாது. உட்காருங்கள்.

(ஆ) விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு ''விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்திற்குப் பெயர் சூட்டுவது தொடர்பான பிரச்சினை பற்றி சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ், பேரவையில் ஓர் அறிக்கையை வைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் பெரிய வருவாய் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து சீரான நிருவாக அமைப்பிற்கு வழி வகுத்து வருகிறது. அதன் அடிப்படையில், சென்ற இரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதேபோல், தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, விழுப்புரம் மாவட்டம் என்றும் பெயர் வைப்பது என்று முடிவு செய்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பேரவைக்கு, தனது மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் தெரிவித்தார்கள்.

முற்பகல் 11-25

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, விழுப்புரத்தினைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு வைக்க வேண்டிய பெயர் குறித்து, பல்வேறு இடங்களிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும், எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. குறிப்பாக, வன்னியர் சமுதாய இனத்தைச் சேர்ந்த, வன்னியர் சமுதாய மக்களின் வளர்ச்சிக்கு வழிகோலும் 18 சங்கங்கள் என்னிடம் ஒரு கோரிக்கை மனுவை வைத்தார்கள்.

1. தமிழ்நாடு வன்னியர் மன்றம்.
2. தமிழ்நாடு வன்னியர் பேரவை.
3. தமிழ்நாடு வன்னியர் சங்கம்.